விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகிறது. நம்முடைய இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் முதன் முதலாக நம்முடைய மீனளத்துறையின் மூலம் கட்டப்படுகிறது. இப்போது 10 படகுகள் கட்டுவதற்கு எடுத்துக் கொண்டு, 31-32 இரண்டு படகுகளைக் கட்டவும் இப்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். அது மட்டுமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தில் சோஷியல் வெல்பேர் சொசைடி மூலமாக கட்டப்பட இருக்கிற 57 அடி நீளமுள்ள படகுகளைக் கட்டவும் ஒப்பந்தம் மேற்கொண்டு இருக்கிறோம். அந்தத் திட்டம் ஒரு முன்மாதிரியான திட்டம் மாத்திரமல்ல. மிகச் சிறந்த திட்டம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Timber Depots*

*739 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) the number of Government Depots for stocking forest timber in the State as on this date ;

(*b*) whether there is any proposal to open additional depots ; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ), (இ) & (உ)—ஏழு இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் திறக்கும் செயற்குறிப்பு இல்லை.

திரு. என். மருதாசலம் : ஏழு இடங்களில் திறக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள், எந்தெந்த இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றது ? கோவையில் பல மரக்கடைகள் இருக்கின்றன. கோவை மாவட்டத்தில் மரக்கடைகள் மேலும் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள ஏழு இடங்களில், கோவை மாவட்டத்தில் மட்டும் மூன்று இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றன. பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், இருட்டுப்பள்ளம்.

சந்தன மரங்கள்

* 740 வினா—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973–74 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் செய்யப்பட்ட சந்தன மரங்கள் எவ்வளவு ? அதன் மதிப்பு எவ்வளவு ?